டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 24.01.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 179 - Madurai | Online Edition

# கார்பன் செறிவூட்டப்பட்ட 208 தொழில்களுக்கான பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்திற்கான இலக்குகளை மத்திய அரசு அறிவித்துள்ளது

புது தில்லி, ஜன.23

கார்பன் செறிவூட்டப்பட்ட தொழில்களுக்கான பசுமைக் குடில் வாயு வெளியேற்றம் குறித்த இலக்குகளை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது.

இதன்படி, கடந்த ஜனவரி 13-ம் தேதி வெளியிடப்பட்ட அறிக்கையில் பெட்ரோலியம் சுத்திகரிப்பு நிலையங்கள், பெட்ரோ கெமிக்கல்ஸ், ஜவுளி மற்றும் அலுமினியம் போன்ற தொழில்துறைகளுக்கான கார்பன் வெளியேற்றம் தொடர்பான இணக்க நடைமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளது.

கார்பன் செறிவூட்டப்பட்ட 208 நிறுவனங்களுக்கு பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்திற்கான இலக்குகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, அலுமினியம், சிமெண்ட், காகிதக்கூழ் உள்ளிட்ட 282 தொழில் நிறுவனங்களுக்கு இந்தப் புதிய நடைமுறைகள் பொருந்தும்.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலும் பசுமைக் குடில் வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.



# இணைய வழி பயிர் கணக்கெடுப்பை ஆய்வு செய்த வேளாண்மை துறை அதிகாரிகள்



அரியலூர், ஜன.23

அரியலூர் மாவட்டத்தில் ராபி பருவத்தில் 2025-26 சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கு இணைய வழி கணக்கெடுப்பு, (டிசிஎஸ்) வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மையின் சகோதரத்துறைகள் அலுவலர்கள் மூலம் நடைபெற்று வருகிறது. பழைய முறையில் அடங்கல் முறைக்கு மாற்றாக இணைய வழி செயலி மூலம் கணக்கெடுப்பு செய்வதால் மாவட்டத்தில் மொத்த பயிர்களின் சாகுபடி பரப்பு, உற்பத்தி கணக்கீடு செய்ய இயலும், மேலும் பூச்சி நோய் தாக்குதல் விவரம் மற்றும் பயிர் சேதம் கணக்கெடுப்பு செய்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முடியும். இப்பணியினை வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் சகோதரத் துறை அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் செய்து வருகிறார்கள்.

இப்பணியினை ஆய்வு செய்வதற்காக வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் உத்தரவின் படியும், அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி அறிவுரையின்படி, அரியலூர் மாவட்டத்திற்கு வருகை தந்த வேளாண்மை இணை இயக்குனர் மோகன், வேளாண்மை வணிகம், சென்னை, ஆய்வு மேற்கொண்டார்.

அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் வட்டாரத்தில், கீழவேலி, தா.பலூர் வட்டாரத்தில், கடம்பூர், சுத்தமல்லி, திருமானூர் வட்டாரத்தில், கீழ காவட்டான் குறிச்சி, வெங்கனூர், கோவில் எசனை ஆகிய கிராமங்களில் இணைய வழி பயிர் கணக்கெடுப்பு பணியினை ஆய்வு செய்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

ஆய்வின் போது வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், வட்டாரத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குனர்கள் தமிழ்மணி, பரமசிவம், மகேந்திரவர்மன் மற்றும் சதீஷ், வேளாண்மை அலுவலர் மற்றும் தோட்டக்கலை துறையின் துணை இயக்குனர் பால முருகன் மற்றும் வட்டாரத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் கலந்து கொண்டார்கள்.

ஆய்வு முடிந்த பிறகு வேளாண்மை இணை இயக்குனர் மோகன் மற்றும் வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி ஆகியோரின் தலைமையில் வட்டாரத்தில் உள்ள அனைத்து வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் அனைத்து வேளாண்மை சகோதரத்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது என வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

# பத்து இலை கரைசல் பற்றி செய்முறை விளக்கம் கொடுத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



பெரம்பலூர், ஜன.23

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், நக்கசேலம் கிராமத்தில், இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவர்களான கார்த்திக், கதிர், கவி கிசோர், கவி அரசு, கவியரசு, மணிகண்டன், மாதவன், மதிகணேஷ், மோகன்ராஜ், முத்துப்பாண்டி, நாகராஜ் ஆகியோர் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் நக்கசேலம் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு பத்து இலை கரைசலின் செயல் முறை விளக்கம் மற்றும் அதன் பயன்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# பூஜ்ய ஆற்றல் குளிர்ப்பதன சேமிப்பு அறை செயல்விளக்கமளித்த தோட்டக்கலைத் துறை மாணவர்கள்



சேலம், ஜன.23

சேலம் மாவட்டம், பனைமரத்துப்பட்டி வட்டாரம், சந்தியூரில் அமைந்துள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற விதை திருவிழா நிகழ்ச்சியில் தோட்டக் கலை மாணவர்கள் சிறப்பாக பங்கேற்றனர். இந்நிகழ்வின் போது, பூஜ்ய ஆற்றல் குளிர்ப்பதன சேமிப்பு அறை குறித்த செயல் விளக்கத்தை அங்கு பார்வையிட வந்த விவசாயி களிடையே மாணவர்கள் நேரடியாக செய்து காண்பித்தனர்.

மேலும், மின்சாரம் தேவையின்றி இயற்கை குளிர்ச்சியைப் பயன்படுத்தி காய்கறிகள், பழங்கள் மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களை நீண்ட நாட்கள் வைத்திருக்க இந்த சேமிப்பு அறை எவ்வாறு பயன்படுகிறது என்பதை விளக்கமாக எடுத்துரைத்தனர்.

இதற்காக அமைக்கப்பட்ட பூஜ்ய ஆற்றல் குளிர்ப்பதன சேமிப்பு அறையின் மாதிரியையும் விவசாயிகளின் பார்வைக்கு வைத்து அதன் செயல்முறை, பயன்கள் மற்றும் செலவுக் குறைவு குறித்து விரிவாக விளக்கம் அளித்தனர். இந்த செயல்விளக்கம் விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், விளை பொருட்களின் சேமிப்பு இழப்புகளை குறைக்க இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily





**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# கால்நடைகளில் குடற்புழு நீக்க பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



மதுரை, ஜன.23

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுக்காவில் யூபுநிசி திட்டத்தின் கீழ் தங்கி பயின்று வரும் கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதியாண்டு பயின்று வரும் மாணவிகளான முனிசா, தருணிகா, ஜீவிதா, கோபிகா, அன்சல்னா, நெஷ்மிக்கா மற்றும் அஜிதா ஆகியோர் இணைந்து அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு கால்நடைகளில் குடற்புழு நீக்கம் குறித்து பயிற்சி அளித்தார்கள்.

இப்பயிற்சியில் கால்நடை ஆரோக்கியத்திற்கு அவசியம் மாடுகளில் குடற் புழுக்கள் நீக்க வேண்டும். மாடுகளில் குடற் புழுக்கள் இருப்பதால் பால் உற்பத்தி குறைதல், உடல் வளர்ச்சி மந்தம், உணவின் முழுப் பயன்பாடு இல்லாமை, இரத்தச் சோகை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால், விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பு ஏற்படும். இதனைத் தவிர்க்க புழுநீக்கம் முறையாக மேற்கொள்ள வேண்டும்.

**புழு நீக்கம் செய்ய வேண்டிய காலம்**

● குட்டி கன்றுகள் – 3 மாதத்திற்கு ஒரு முறை

● இளம் மற்றும் வளர்ந்த மாடுகள் – 6 மாதத்திற்கு ஒரு முறை

● மழைக்காலத்திற்கு முன் மற்றும் பின் புழு நீக்கம் செய்வது சிறந்தது என்றும் மற்றும் புழு நீக்கத்தின் பயன்கள் குறித்தும் அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மாணவிகள் எடுத்து கூறினர்.




Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
POWERGRID
BHEL
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# கிராமப்புற பங்கேற்பு மதிப்பீடு மேற்கொண்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.23

பிஜிபி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் நாமக்கல் ராசம்பாளையம் ஊராட்சியிலுள்ள குஞ்சாம்பாளையம் குக்கிராமத்தில் கிராமப்புற பங்கேற்பு மதிப்பீடு முறைகள் மூலம் விரிவான கிராம ஆய்வை வெற்றிகரமாக மேற் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், கிராம மக்களின் சமூக பொருளாதார நிலை, விவசாய நடைமுறைகள், இயற்கை மற்றும் மனித வளங்களின் பயன்பாடு, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியவற்றை நேரடியாகக் கண்டறிந்து பதிவு செய்வதாகும். இந்த கிராமப்புற பங்கேற்பு மதிப்பீடு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, மாணவிகள் வள வரைபடம் மூலம் கிராமத்தில் உள்ள நிலங்கள், நீர் வளங்கள், வீடுகள், பொதுக் கட்டிடங்கள் மற்றும் விவசாய வளங்களை தெளிவாக வரைபடமாகக் காட்சிப்படுத்தினர். பருவகால அட்டவணை மூலம் பயிர் சாகுபடி நிலை, வேலைவாய்ப்பு, வருமானம், நோய்கள் மற்றும் நீர்வள பயன்பாட்டில் ஏற்படும் பருவகால மாற்றங்களை விளக்கினர்.

மேலும், காலவரிசை மூலம் கிராமத்தின் வரலாற்று வளர்ச்சி, முக்கிய நிகழ்வுகள் மற்றும் ஏற்பட்ட மாற்றங்களை பதிவு செய்தனர். செல்வ நிலை வரிசைப்படுத்தல் வழியாக கிராம மக்களின் பொருளாதார நிலை வேறுபாடுகளைப் புரிந்து கொண்டனர். வட்ட வரைபடம் மூலம் அரசு துறைகள், ஊராட்சி அமைப்பு, வங்கிகள் மற்றும் பிற நிறுவனங்களுடன் கிராமத்தின் தொடர்புகளை எடுத்துரைத்தனர். தினசரி செயல்பாட்டு அட்டவணை மூலம் விவசாயிகள், பெண்கள் மற்றும் தொழிலாளர்களின் நாளாந்த வேலைப் பளுவை ஆய்வு செய்தனர். பிரச்சினை மரம் வழியாக கிராம மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள், அவற்றின் காரணங்கள் மற்றும் விளைவுகளை கண்டறிந்தனர். மக்கள் தொகை வரைபடம் மூலம் வீடுகள், குடும்ப எண்ணிக்கை மற்றும் மக்கள் தொகை விநியோகத்தை வெளிப்படுத்தினர்.

அத்துடன், பயிர் சாகுபடி சதவீதம், வீடுகள் சதவீதம் உள்ளிட்ட தகவல்களையும் சேகரித்து, விவசாய நில பயன்பாடு மற்றும் குடியிருப்பு அமைப்பை தெளிவாக எடுத்துரைத்தனர். இந்த கிராமப் புற பங்கேற்பு மதிப்பீடு நிகழ்ச்சி குஞ்சம்பாளையம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலர் மகேஸ்வரி, தொடங்கி வைக்கப்பட்டு, அவர்களின் முழுமையான ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சி மூலம் மாணவிகள் நடைமுறை அனுபவம் பெற்றதுடன், கிராம வளர்ச்சிக்கான திட்டமிடலுக்கு பயன்படும் முக்கிய தகவல்களும் சேகரிக்கப்பட்டன. இந்த ஆய்வு, எதிர்கால கிராம வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.



# புதிய ரப்பர் தொழிலாளர் வங்கி துவக்கம் பற்றிய கலந்தாய்வு கூட்டம்

கன்னியாகுமரி, ஜன.23

கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் சூரியகாந்தி மகளிர் சுய உதவிக்குழு கடந்த 15/01/26 அன்று ரப்பர் வாரியத்தின் நிதி உதவியுடன் ரப்பர் வாரியத்தின் தேசிய ரப்பர் பயிற்சி மையத்திற்கு சென்று ரப்பர் சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டம் பற்றிய தகவல்களை பெறவும், தங்களின் ரப்பர் சம்பந்தமான அனுபவத்தை பகிர்ந்து கொள்ளவும் கோட்டயம் சென்றனர். இந்த பயிற்சி பயணத்தை ஆய்வு செய்யவும், இதன் அடிப்படையில் புதிய ரப்பர் சார்ந்த தொழில்கள் துவங்கவும் கலந்தாய்வு 20/01/26 அன்று நடைபெற்றது.




கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் நடந்த கூட்டத்தில் செயலாளர் P.S.பிரதீப்குமார் வரவேற்புரை வழங்கினார்.

பின்னர் தலைமை உரையாற்றிய பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர் முனைவர் தி.ராஜ்பிரவின் பேசும் போது தற்போது ரப்பர் பால் வெட்ட பயிற்சி பெற்றுள்ள சுய உதவிக்கு குழுவின் உறுப்பினர்களை கொண்டு புதியதாக ரப்பர் தொழிலாளர் வங்கி துவங்குவது பற்றி விளக்கி கூறினார். பின்னர் ரப்பர் பயிற்சி மையத்தின் பயிற்சியில் சிறப்பாக பங்கு பெற்றவர்களுக்கு நினைவு பரிசுகளை ரப்பர் வாரிய பணியாளர் அப்துல்ஹாதி வழங்கினார். இறுதியாக சூரியகாந்தி மகளிர் சுய உதவிக் குழுவின் செயலாளர் செல்வி நன்றி தெரிவிக்க கலந்தாய்வு கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# வசந்தம் அக்ரிடெக்

VASANTHAM Agri Tech

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு, சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST



Sarathi i06

**மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்**

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

**உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்**

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும் சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# பூசணி சாகுபடி தொழில்நுட்பங்கள் (PUMPKIN CULTIVATION)



பொங்கல் பண்டிகையன்று மதிய உணவில் அனைவரின் வீடுகளில் பூசணிக்காய் என்ற பரங்கி காய் கூட்டு இல்லாமல் இருக்காது. பாரம்பரிய காய்களில் இதுவும் ஒன்று. இதனை நம்முடைய வீடுகளில் வேலி ஓரமாக விதைத்து விளைவித்து சாப்பிடுவார்கள். இதை தனியாக விளைவிப்பது குறித்து விரிவாக பார்ப்போம். அதிக பாரமரிப்பு இல்லாமலே குறுகிய காலத்திலே கணிசமான வருமானம் தரக்கூடிய காய்கறி பயிர்.

**ரகங்கள்**

கோ 1, கோ 2, அர்க்கா, சூரிய முகி

**பருவம்**

ஜுன் – ஜுலை, டிசம்பர் – ஜனவரி

**விதை அளவு**

ஏக்கருக்கு 400-500 கிராம் விதையை குழிக்கு 2-3 என்ற அளவில் ஊன்ற வேண்டும். பின்னர் 15 நாட்களுக்கு பிறகு களைத்து விட்டு ஓரிரு செடிகள் மட்டுமே குழிகளில் இருக்க வேண்டும்.

**இடைவெளி**

குழிகள் 30 X 30 செ.மீ என்ற அளவில் 2 மீட்டருக்கு 2 மீட்டர் இடைவெளியில் தோண்ட வேண்டும்.

**உரமிடுதல்**

குழிக்கு 10 கி தொழு உரமிட வேண்டும்.

**களையெடுத்தல்**

இருமுறை கைகளை எடுக்க வேண்டும்.

**வளர்ச்சி ஊக்கிகள் தெளிப்பு**

நடவு செய்த 10 முதல் 15நாட்களுக்கு பிறகு எத்தரல் 250 பிபிஎம் (10 லிட்டர் நீரில் 2.5 மிலி) 4 முறை வார இடைவெளியில் தெளிக்க வேண்டும். இதை தெளிப்பதால் பெண் பூக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதனால் மகசூல் கூடுதலாக இருக்கும்.

**பூச்சி/ நோய் தாக்குதல் & தடுப்பு முறை**

பழ ஈக்களால் தாக்குதலை தடுக்க கருவாட்டு பொறி வைக்க வேண்டும். சாம்பல் நோய் கட்டுப்படுத்த கார்பன்டாசிம் 0,5 கிராம் என்ற அளவில் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம்.

**அடிச்சாம்பல் நோய்**

இதைக்கட்டுபடுத்த மேன்கோசெப் அல்லது குளோர்தலானில் 2 கிராம் என்றளவில் 1 லிட்டர் நீரில் கலந்த தெளிக்கலாம்.

**அறுவடை**

பழங்கள் பச்சை நிறத்திலிருந்து மஞ்சள்நிறத்திற்கு மாறும் போது அறுவடை செய்ய வேண்டும். காய்கள் அறுவடைக்கு வர ஆரம்பித்திலிருந்து 10 நாட்கள் இடைவெளியில் காய்கள் அறுவடை செய்யலாம். ஒரு கிலோ 8-10க்கு குறைந்த பட்ச விலையாகவும் விற்பனை செய்யலாம். அல்லது தண்டுகளில் பழங்களுக்கு பற்றின்மை குறையும் போது அறுவடை செய்யலாம். நன்கு முதிர்ந்த பூசணி பழங்களை நட்ட 85- 90 நாட்களுக்குள் அறுவடை செய்யலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# இப்கோ நானோ உர விழிப்புணர்வு கருத்தரங்கம்



ஈரோடு, ஜன.23

ஈரோடு மாவட்டம், நல்லூர் மற்றும் புளியம்பட்டி கிராமங்களில் இப்கோ நானோ உரங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நொச்சிக்குட்டை மற்றும் கோபிநல்லூர் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தின் உர விற்பனையாளர் நவீன் மற்றும் தலைவர் மதிவாணன் ஆகியோர் தலைமை வகித்தனர். கருத்தரங்கில் இப்கோ கள அதிகாரி கலந்து கொண்டு, விவசாயிகளுக்கு நானோ யூரியா, நானோ டி.ஏ.பி, நானோ ஜின்க் மற்றும் நானோ காப்பர் திரவ உரங்களின் பயன்பாட்டு முறைகள், அளவுகள் மற்றும் பல்வேறு பயிர்களில் பெறப்படும் நன்மைகள் குறித்து விரிவாக விளக்கினார்.

மேலும், மண் ஆரோக்கியம் சீர் குலைவதற்கான காரணங்களை எடுத்துரைத்து, சீரான மற்றும் சரியான அளவில் உரமிடுதலின் அவசியத்தை வலியுறுத்தினார். உரங்களை துல்லியமாகவும் செலவுக் குறைவாகவும் பயன்படுத்த ட்ரோன் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள் குறித்தும் விவரித்தார். தொடர்ந்து, இப்கோ நிறுவனத்தின் சங்கட் ஹரன் பீமா யோஜனா திட்டம் விவசாயிகளுக்கு அறிமுகப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், இப்கோ நானோ உரங்களை வாங்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.2 லட்சம் வரை இலவச விபத்து காப்பீடு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# 17வது அறிவியல் ஆலோசனைக்குழு கூட்டத்தில் பருவநிலை-நெகிழ்திறன் மற்றும் வாழ்வாதார-மைய செயல்திட்ட பட்டியல்



இராமநாதபுரம், ஜன.23

இராமநாதபுரம், வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK) 17வது அறிவியல் ஆலோசனைக் குழு (SAC) கூட்டத்தை 22.1.26 அன்று இராம நாதபுரம் KVK-இல் ஏற்பாடு செய்தது. அடுத்த ஆண்டிற் கான செயல்திட்டம் மற்றும் முன்னுரிமை திட்டங்களை இறுதி செய்தது. காலநிலை பின்னடைவு, நிலையான விவசாயம் மற்றும் வாழ் வாதாரமேம்பாடு ஆகியவற்றில் வலுவான கவனம் செலுத்துகிறது. இந்தக் கூட்டத்திற்கு கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் டாக்டர்.பி.பி.முருகன் தலைமை தாங்கினார்.

இந்தக் குழுவில் உரையாற்றிய டாக்டர் முருகன், உலகெங்கிலும் இருந்து நிரூபிக்கப்பட்ட விவசாய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி வறட்சி மேலாண்மை மற்றும் தணிப்பு தொழில்நுட்பங்களை முறை யாக ஆவணப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். நீர் மேலாண்மை மற்றும் 'ஒரு சொட்டு அதிக பயிர்' தொழில் நுட்பங்கள் விரிவான ஆவணப்படுத்தப்பட்டு, கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலம், குறிப்பாக இராமநாதபுரம் போன்ற பருவநிலை பாதிப்புக்குள்ளான மாவட்டங்களில் பரவலாக பரப்பப்பட வேண்டும் என்று அவர் எடுத்துரைத்தார்.

காளான் சாகுபடி, தேனீ வளர்ப்பு, கடற்பாசி உற்பத்தி, பனை அடிப்படையிலான மதிப்பு கூட்டல் போன்ற திறன் அடிப்படையி லான, வருமானத்தை உருவாக்கும் நிறுவனங்களின் மூலம் பின்தங்கிய விவசாயிகள், விவசாயப் பெண்கள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கான வாழ் வாதார வாய்ப்புகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

கரிம மற்றும் இயற்கை விவசாய நிறுவனங்களை ஊக்குவிக்க சிறு எண்ணெய் பிரித்தெடுத்தல் அலகுகள் உட்பட சிறிய அளவிலான வீட்டு பதப்படுத்தும் இயந்திரங்களை அறிமுகப்படுத்த பரிந்துரைக்கப்பட்டது.

பயிற்சி, உற்பத்தி மட்டுமல்லாமல், மதிப்பு கூட்டல், பேக்கேஜிங், பிராண்டிங், லேபிளிங் மற்றும் மார்க்கெட்டிங் ஆகியவற்றுடன் உயிர் உள்ளீட்டு உற்பத்தி வள மையங்களை நிறுவுவதையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஹைதராபாத் அட்டாரி முதன்மை விஞ்ஞானி டாக்டர் பாஸ்கரன், இப்பகுதியின் வேளாண் – சுற்றுச்சூழல் பலன்களுக்கு ஏற்ப கடல் சார்ந்த, பனைமராவை அடிப்படையாகக் கொண்ட, முண்டு மிளகாய் அடிப்படையிலான மற்றும் மல்லிகை அடிப்படையிலான தொழில்கள் உள்ளிட்ட சுற்றுச்சூழல் அடிப்படையிலான தொழில் முனைவோரை ஊக்குவிப்பதை வலியுறுத்தினார்.

மதுரை சமூக அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் டீன் டாக்டர் எஸ்.காஞ்சனா, வங்கி, காப்பீடு, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் உள்ளிட்ட மாநில மற்றும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்து விவசாயிகள் மற்றும் கிராமப்புற சமூகங்களுக்கு தொடர்ந்து புதுப்பிப்பதற்காக ஒவ்வொரு கே.வி.கே-யிலும் ஒரு விஞ்ஞானிக்கு மாஸ்டர் பயிற்சியாளராக பயிற்சி அளிக்க முன்மொழிந்தார். பனை மரத்தை தமிழ்நாட்டின் மாநில மரமாக அங்கீகரித்து, பனை மரத்தை அடிப்படையாகக் கொண்ட பொருட்களுக்கான வணிக அடைகாக்கும் மையத்தை நிறுவவும் அவர் பரிந்துரைத்தார்.

வேளாண்மை இணை இயக்குநர் பாஸ்கர நாராயணன், நெல் மற்றும் பிற பயிர்களில் அதிகப்படியான களைக்கொல்லி பயன் பாட்டைக் குறைக்கும் தொழில்நுட்பங்களை ஊக்குவிக்கவும், விவசாய கழிவு சிதைவு தொழில்நுட்பங்களை பரவலாக பின்பற்றவும் அழைப்பு விடுத்தார்.

தோட்டக்கலை நிபுணர் டாக்டர் ராஜமாணிக்கம், வருமானம் மற்றும் காலநிலை பின்னடைவை மேம்படுத்துவதற்காக மாதுளை, புளி, காய்கறிகள் மற்றும் முருங்கைக்காய் போன்ற மாற்று பயிர்களைப் பயிரிட விவசாயிகளை ஊக்குவிக்க பரிந்துரைத்தார். கால்நடைத் துறையிலிருந்து, தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகத்தின் (TANUVAS) பேராசிரியர் டாக்டர் விஜயலிங்கம், தீவன சாகுபடியை விரிவுபடுத்த வேண்டி யதன் அவசியத்தையும், கால்நடை அடிப்படையிலான வாழ்வாதாரங் களை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஆதரவளிக்க தரமான குஞ்சுகளை மலிவு விலையில் வழங்கவும் அவர் பரிந்துரைத்தார்.

கே.வி.கே. இராமநாதபுரத்தின் முன் முயற்சிகள் மற்றும் பங்களிப்புகளை எஸ்ஏசி உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் பாராட்டினர். இந்த கூட்டத்தை திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் எஸ்.வள்ளல் கண்ணன் திறம்பட ஒருங்கிணைத்தார், அவரது முயற்சிகள் அதிகாரிகள்மற்றும் பங்குதாரர்களிடமிருந்து பரவலான பாராட்டுகளைப் பெற்றன.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# சின்னபுலியூர் கிராமத்தில் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு (PRA) மேற்கொண்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



ஈரோடு, ஜன.23

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரத்தில் அமைந்துள்ள சின்னபுலியூர் கிராமத்தில், வாணவராயர் வேளாண் கல்லூரி (Vanavarayar Institute of Agriculture) இறுதி ஆண்டு வேளாண்மை பயிலும் மாணவர்கள், தங்களின் கிராமப்புற வேளாண் பணிப்பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு (Participatory Rural Appraisal - PRA) நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டனர்.

இந்த PRA செயல்முறை மூலம் கிராம மக்களின் சமூக, பொருளாதார நிலை, வேளாண்மை முறைகள், பயிர் முறை, பாசன வசதி, மண் வளம், கால்நடை வளர்ப்பு, இயற்கை வளங்கள் மற்றும் கிராமத்தின் முக்கிய பிரச்சினைகள் குறித்து விரிவான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இதில் சமூக வரைபடம், வள வரைபடம், காலவரிசை பகுப்பாய்வு, பருவகால அட்டவணை மற்றும் பிரச்சினை அடையாளம் காணுதல் போன்ற PRA கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் கிராம மக்கள் மற்றும் விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது அனுபவங்கள் மற்றும் தேவைகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். PRA மூலம் பெறப்பட்ட தகவல்கள், கிராம வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்கவும், விவசாய உற்பத்தி மேம்பாடு மற்றும் விவசாயிகளின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கான வழிமுறைகளை வகுக்கவும் பயன்படும் என மாணவர்கள் தெரிவித்தனர்.

இந்த பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு நடவடிக்கை, மாணவர்களுக்கு நடைமுறை அறிவை வழங்குவதோடு, கிராம மக்களுடன் நேரடி தொடர்பு ஏற்படுத்தி அவர்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்ள உதவிய ஒரு பயனுள்ள முயற்சியாக அமைந்தது.

# அசோலா வளர்ப்பு முறை பற்றி விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



தஞ்சாவூர், ஜன.23

அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவி லைலா, அசோலா வளர்ப்பு முறை பற்றி அற்புதபுரம் தஞ்சாவூரில் விவசாயி களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அசோலா (Azolla) வளர்ப்பு என்பது நெல் வயல்களில் இயற்கையான நைட்ரஜன் உரமாகவும், கால்நடை தீவனமாகவும் பயன்படுத்தப்படும் ஒரு நீர்வாழ் பெரணி (floating fern) ஆகும். இது வயலில் தண்ணீரில் மிதந்து, வளிமண்டல நைட்ரஜனை நிலைய-ாக்கி, நெற்பயிர் களுக்குத் தேவையான சத்துக்களை அளித்து, இரசாயன உரத் தேவையைக் குறைக்கிறது (சுமார் 25-40 கிலோ நைட்ரஜன்/ ஹெக்டேர்). நெல் நடவு செய்த 7 நாட்களுக்குப் பிறகு, ஏக்கருக்கு 4-5 குவிண்டால் பசுமையான அசோலாவை வயலில் பரப்பி, அதனை மட்கச் செய்வதன் மூலம் கரிமப் பொருளை அதிகரிக் கலாம். இது களைகளைக் கட்டுப்படுத்தி, நீர் மேலாண்மைக்கும் உதவுகிறது.

# நெல்லில் குலைநோய் மேலாண்மை முறைகள் வேளாண்மை உதவி இயக்குநர் அறிவுரை

ராணிப்பேட்டை, ஜன.23

காவேரிபாக்கம் வட்டாரத்தில் நடப்பு நவரை பட்டத்தில் நெல் பயிர் சுமார் 3700 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது நடவு முதல் தூர் கட்டும் பருவ நிலையில் உள்ளது. தற்போது நிலவி வரும் அதிக குளிர் மற்றும் அதிக வெயில் காரணமாக நெல் பயிரில் குலை நோய் தாக்குதல் அதிகம் ஏற்பட சாதகமான சூழல் உருவாகி உள்ளதால் விவசாயிகள் தங்கள் நெல் பயிரில் குலை நோய் தாக்குதல் உள்ளதா என்பதை அவ்வப்போது வயலுக்கு சென்று ஆய்வு செய்து தாக்குதல் இருப்பின் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என காவேரிபாக்கம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

நோய்க்கான காரணம் ஆக அதிக தழைச்சத்து இடுதல், மேக மூட்டம், அதிகமான ஈரப்பதம், காற்றின் மூலமும், பாதிக்கப்பட்ட விதைகள் மூலமும் நெல் வயலில் காணப்படும் களைகள் மூலமும்



பரவுகிறது. நெல்லில் குலை நோய் தாக்குதல் அறிகுறிகள் ஆரம்ப நிலையில் இலையில் ஊதா கலந்த பச்சை நிறத்தில் சிறு புள்ளிகள் தோன்றி பின்னர் நீள் வடிவில் வளரும். நோய் வளர்ச்சி அடைந்த நிலையில் புள்ளிகள் வெண்மை கலந்த சாம்பல் நிற மையப் பகுதியையும் பழுப்பு நிற ஓரங்களையும் கொண்டு கண் வடிவில் காணப்படும். பாதிக்கப்பட்ட கதிரின் கழுத்துப்பகுதி கதிர் வெளி வரும் போது கருத்து சுருங்கி விடுகிறது.

கதிர்கள் உடைந்து தொங்கும் மணிகள் பதராகும். கவனிக்காமல் இருந்தால் 20 முதல் 80 சதவீதம் வரை மகசூல் இழப்பு ஏற்படும் என்பதால் அதிக கவனம் தேவை.

நோய் மேலாண்மை முறைகளாக அவர் தெரிவித்ததாவது,

● நோயற்ற பயிரிலிருந்து விதைகளை தேர்வு செய்ய வேண்டும். நடவு வயலில் நோயற்ற நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். வயல் மற்றும் வரப்புகளில் உள்ள களைகளை அகற்ற வேண்டும்.

● தழைச்சத்தினை பரிந்துரைக்கப்பட்ட அளவு மூன்று முறையாக பிரித்து இட வேண்டும்.

● விதைக்கும் முன் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.

● நடவுக்கு முன் நாற்றுகளை சூடோமோனாஸ் கரைசலில் 30 நிமிடம் ஊற வைத்து நடவு செய்யலாம்.

● நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் மருந்தினை தொழு உரத்துடன் கலந்து இடவும்.

● ட்ரைசைக்ளோசோல் 75 WP - 200 கிராம் / ஏக்கர்

● அசாக்சிஸ்டோபின் 23% SC - 200 மி.லி

● ஐசோபுரோதயலோன் 40% EC - 300 மிலி

● கசுகாமைசின் 3% SL - 400 மிலி

● டெபுகோனசோல் 25% WDG - 300 கிராம் போன்ற பூஞ்சாணக் கொல்லி மருந்து ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

# சேகோ தொழிற்சாலையில் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.23

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஒன்றியத்தில் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் கிராமப்புற அனுபவப் பயிற்சியை மேற்கொண்டுள்ளனர்.

இதனை அடுத்து செல்லப்பம்பட்டி அருகே உள்ள சம்பத் அவரது சேகோ தொழிற்சாலையை பார்வையிட்டனர். மண்ணில் புதைந்து கிடக்கும் மரவள்ளி கிழங்கிலிருந்து பவளமாய் காட்சியளிக்கும் ஜவ்வரிசி உற்பத்தி பற்றி அறிந்து கொண்டனர். ஜவ்வரிசி உற்பத்திக்கு கிழங்களை தேர்வு செய்வது, கிழங்களை மாவாக்குவது, மாவில் இருந்து ஜவ்வரிசி தயாரிப்பது என அனைத்தையும் செயல் விளக்கம் அளித்து காட்டினார்.

சம்பத், நிறுவனர், மரவள்ளி கிழங்கு மாவு எடுத்தபின் இருக்கும் கழிவு நீரிலிருந்து தங்களுக்கு தேவையான மின்சாரத்தை பயோ கேஸ் கிடங்கு மூலம் உற்பத்தி செய்கிறார். பயோ கேஸில் வெளியேறும் கழிவுநீரை தனது விவசாய நிலத்திற்கு பயன்படுத்துவதன் மூலம் சிறந்த முறையில் கழிவு மேலாண்மை செய்து வருகிறார். சூப்பர் பிரெஷ் என்னும் பிராண்டில் தனது ஜவ்வரிசிகளை விற்பனை செய்து வருகிறார். தரத்தில் சிறந்த இவரது ஜவ்வரிசி 90 கிலோ மூட்டை ரூ.3250 வரை விலை செல்கின்றன. ஜவ்வரிசி கொண்டு 65 விதமான உணவு வகைகளை தயாரிக்கலாம் எனவும் அதன் மருத்துவ பயன்கள் பற்றியும் மாணவிகளுடன் பகிர்ந்து கொண்டார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்



Toll Free No. 1800 - 4257333

# உயிரியல் அங்கக உரம் தயாரித்தல் பயிற்சி

கிருஷ்ணகிரி, ஜன.23

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்திற்கு உட்பட்ட பூதிமுட்லு கிராமத்தில், அதியமான் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் ஊரக வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் கீழ், உயிரியல் அங்கக உரம் தயாரித்தல் குறித்த காட்சிப்படுத்தல் நிகழ்ச்சியை விவசாயிகளுக்காக நடத்தினர். இந்த நிகழ்ச்சியில், மண்ணின் உயிர்ச்சக்தியை உயர்த்தி, பயிர் வளர்ச்சியை மேம்படுத்தும் உயிரியல் அங்கக உரங்களின் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. குறிப்பாக பசுமை உரம், மாட்டு சாணம், பயிர் கழிவுகள், உயிரியல் நுண்ணுயிர்கள் பயன்படுத்தி அங்கக உரம் தயாரிக்கும் முறைகள் செய்முறை மூலம் எடுத்துரைக்கப்பட்டன.

மேலும், அங்கக உரம் பயன்படுத்துவதால் மண்ணின் கட்டமைப்பு மேம்படுதல், நீர் பிடிப்புத் திறன் அதிகரித்தல், ரசாயன உரங்களின் பயன்பாடு குறைதல் மற்றும் நீடித்த விவசாயம் சாத்தியமாகும் என்பதையும் மாணவர்கள் விவசாயிகளுக்கு எடுத்துச் சொன்னனர். தயாரிக்கப்பட்ட உரத்தை சரியான அளவில் மற்றும் சரியான காலத்தில் பயன்படுத்தும் முறைகள் பற்றியும் விளக்கமளிக்கப் பட்டது. இந்த காட்சிப்படுத்தலைக் கண்ட விவசாயிகள் அதிக ஆர்வத்துடன் கலந்து கொண்டு, தங்களது பண்ணைகளில் உயிரியல் அங்கக உரம் தயாரித்து பயன்படுத்துவதற்கான நம்பிக் கையை வெளிப்படுத்தினர். இத்தகைய பயனுள்ள பயிற்சிகள் விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும் என தெரிவித்தனர்.

# உயிரி பூஞ்சானக்கொல்லி பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய கல்லூரி மாணவர்கள்



திருவண்ணாமலை, ஜன.23

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், கீழ் நெல்லி கிராமத்தில் 19.01.26 அன்று ஊரக வேளாண்மை அனுபவப் பயிற்சி திட்டத்தின் கீழ் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு உயிரி பூஞ்சானக் கொல்லியான டிரைக்கோ டெர்மா விரிடி பற்றிய முக்கியத்துவம் மற்றும் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

விழிப்புணர்வின் வாயிலாக டிரைக்கோடெர்மா விரிடியைப் பயன்படுத்தி விதை நேர்த்தி, மண்ணில் இடுதல் மற்றும் நாற்று வேர் மூழ்குதல் செயல்முறைகள் மூலம் வேர் வாயிலாக பரவும் நோய்களை இயற்கையான முறையில், நோய் தாக்கத்தைக் குறைக்கலாம். மேலும், இதன் மூலம் மண் வளம் மற்றும் பயிர்களின் வளர்ச்சி மேம்படும் போன்ற கருத்துக்களை மாணவர்கள் விவசாயிகளுக்கு தெரிவித்தனர். விழிப்புணர்வு நிகழ்ச்சியின் இறுதியாக மாணவர்களுடன் விவசாயிகள் தங்கள் கேள்விகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

## பங்கேற்பு கிராம மதிப்பீடு (PRA) செய்த வேளாண்மை கல்லூரி மாணவர்கள்

நாமக்கல், ஜன.23

நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட வெங்கடேசபுரி கிராமத்தில் பிஜிபி (PGP) வேளாண்மை கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு கிராம மதிப்பீடு (Participatory Rural Appraisal - PRA) நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டனர். இந்த நிகழ்ச்சி மூலம் கிராம மக்களின் நேரடி பங்களிப்புடன் விவசாயம், இயற்கை வளங்கள், பாசன வசதிகள், மண் நிலை, பயிர் முறை மற்றும் வாழ்வாதாரச் சவால்கள் குறித்து விரிவான தகவல்கள் சேகரிக்கப்பட்டன.



இந்த நிகழ்வில்

- சமூக வரைபடம்
- வள வரைபடம்
- பருவ கால நாட்காட்டி
- பிரச்சினை அடையாளம் காணுதல்.

போன்ற PRA கருவிகளை பயன்படுத்தி ஆய்வு செய்தனர். கிராம விவசாயிகளுடன் நேரடி கலந்துரையாடல் நடத்தி, நிலவும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் மேம்பாட்டு வழிமுறைகள் குறித்த ஆலோசனைகளையும் பதிவு செய்தனர்.

இந்த PRA பயிற்சி, மாணவர்களுக்கு நடைமுறை அனுபவத்தை வழங்குவதோடு, கிராம வளர்ச்சிக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்தது. கிராம மக்கள் இந்த முயற்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, மாணவர்களின் பணிகளை பாராட்டினர்.

# ஜீரோ பட்ஜெட் இயற்கை விவசாயம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்





கிருஷ்ணகிரி, ஜன.23

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அதியமான் வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி கல்லூரியின் சார்பாக வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர் செல்வம் தலைமையில் 12 பேர் (சிந்துஜா ஸ்ரீ, சௌந்தரி ச, ஸ்ரீநதி ஏ, ஸ்டெப்ரினா சு, சுபஸ்ரீ மு சி, சுவேதா ந, சுவாதி பிரியா மு, சுவேதா கோ தா, தமிழரசி த, திரிசா கு, வைஷ்ணவி கி, வான்மதி த ) கொண்ட இளமறிவியல் 4ம் ஆண்டு மாணவிகள் குழு ஊரக வேளாண்மை மற்றும் பயிற்சி திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

சூளகிரி வட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அங்கு உள்ள விவசாயிகளிடம் உரையாடவும், அவர்கள் பின் பற்றும் பாரம்பரிய மற்றும் தொழில்நுட்ப விவசாய செயல்முறை மற்றும் பயிர் திட்டங்களை மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்.

மேலும், மாணவிகள் கல்லூரியில் கற்றறிந்த நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் நவீன விவசாய இயந்திரங்களைப் பற்றி எடுத்துரைத்து செயல்முறை விளக்கங்களையும் விவசாயிகளுக்கு செய்து காண்பித்தனர். அதன் ஒரு பகுதியாக,சூளகிரி வட்டத்தில் உள்ள மாதர்சனப்பள்ளி கிராமத்தில், ஜீரோ பட்ஜெட் இயற்கை விவசாயம் (ZBNF) என்பது இரசாயனங்கள், உரங்கள், பூச்சிக் கொல்லிகள் எதுவும் பயன்படுத்தாமல், நாட்டு மாடுகள், இயற்கை பொருட்கள் மற்றும் பண்ணையில் கிடைக்கும் கழிவுகளைக் கொண்டு பூஜ்ஜிய செலவில் விவசாயம் செய்வதாகும்,

இதில் மண் வளம் பெருகி, விவசாய செலவு குறைந்து, ஆரோக்கியமான விளைச்சலைப் பெறலாம். சுபாஷ் பலேகர் என்கின்ற விஞ்ஞானி இந்த முறையை பிரபலப்படுத்தினார் என்று மாணவிகள் பயிற்சி மூலம் எடுத்துரைத்தனர்.

# சர்வதேச விதை சோதனை சங்கம்–ஒரு பார்வை

# [International Seed Testing Association]

ISTA என்பது விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் உலகளாவிய தரநிலைகளை உருவாக்கி, விதை தரத்தை மதிப்பிடுவதற்கான சீரான முறைகளை ஊக்குவிக்கும் ஒரு லாப நோக்கற்ற அமைப்பாகும், இது உலகளாவிய விதை வர்த்தகத் திற்கு உதவுகிறது, மேலும் அதன் விதிமுறைகள், ஆய்வக அங்கீகாரம் மற்றும் சான்றிதழ்கள் மூலம் விதைகளின் தரம், தூய்மை, முளைப்புத்திறன் ஆகியவற்றை உறுதி செய்கிறது.

**முக்கிய நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள்**

**சர்வதேச விதிகளை உருவாக்குதல் :** விதை மாதிரி எடுத்தல் (sampling) மற்றும் சோதனை செய்வதற்கான உலகளாவிய, சீரான விதிகளை உருவாக்கி வெளியிடுகிறது.

**ஆய்வக அங்கீகாரம் (Laboratory Accreditation) :** சர்வதேச தரத்தின் படி விதை சோதனை செய்யும் ஆய்வகங்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறது.

**சர்வதேச சான்றிதழ்கள் (International Certificates) :** அங்கீகரிக் கப்பட்ட ஆய்வகங்கள் ஹூறீவீபு சான்றிதழ்களை வழங்குகின்றன, இது உலகளவில் விதைகளை வாங்கவும் விற்கவும் உதவுகிறது.

**ஆராய்ச்சி மற்றும் பயிற்சி (Research & Training) :** விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் அறிவைப் பரப்புவதை ஊக்குவிக்கிறது.

**தர உத்தரவாதம் (Quality Assurance) :** விதை வர்த்தகத்தில் தரத்தை உறுதிப்படுத்த, அங்கீகாரம், திறன் சோதனை மற்றும் தணிக்கை திட்டங்கள் மூலம் சீரான சோதனைகளை செயல் படுத்துகிறது.

**ISTA–வின் முக்கியத்துவம் (Importance of ISTA)**

**உலகளாவிய வர்த்தகம் (Global Trade) :** சீரான சோதனை முறைகள் மூலம் சர்வதேச விதை வர்த்தகத்தை எளிதாக்குகிறது.

**தரக் கட்டுப்பாடு (Quality Control) :** விதைகளின் முளைப்புத் திறன், தூய்மை, ஈரப்பதம் போன்றவற்றை சோதித்து தரத்தை உறுதி செய்கிறது.

**உணவுப் பாதுகாப்பு (Food Security) :** உயர்தர விதைகளின் பரவலை ஊக்குவித்து உலகளாவிய உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிக்கிறது.

**தமிழ்நாட்டில் ISTA (ISTA in Tamil Nadu) :** கோயம்புத்தூரில் உள்ள விதை சோதனை ஆய்வகம் ISTA அங்கீகாரம் பெற்றது, இது இந்திய பொதுத்துறை ஆய்வகங்களில் ஒன்றாகும். இது சர்வதேச தரத்தில் விதைகளை சோதிக்கும் திறனைக் கொண்டு உள்ளது.

ISTA அங்கீகாரம் பெற்ற ஆய்வகம் என்பதால் சர்வதேச தரத்திற்கு விதை மாதிரிகளை உறுதி செய்யும் பொருட்டு ஏற்றுமதிக்கு தகுதியான ஆரஞ்சு நிற விதைக்குவியல் சான்றிதழ்கள் மற்றும் நீல நிற விதை மாதிரி சான்றிதழ்கள் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கும் தகுதி பெற்றுள்ளது.

ஆரஞ்சு நிற விதை குவியல் சான்றிதழுக்கு நான்காயிரம் (4000) ரூபாயும், நீல வண்ண சர்வதேச விதை மாதிரி சான்றிதழுக்கு 2000 ரூபாயும் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள், தனியார் விதை விற்பனை நிறுவனங்கள், தனியார் விதை உற்பத்தியாளர்கள் மாதிரிகளைக் கொடுத்து தரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

OIC சான்றிதழ் பெறுவதற்கு ஏற்றுமதிக்கு சுயநிர்ணயிக்கப்பட்டு உள்ள விதை குவியலை ஒவ்வொன்றிலும் தனித்தனியாக மாதிரிகள் எடுக்கப்பட வேண்டும் – ஆரஞ்சு வண்ணம் சான்றிதழ் களை பெற்ற விதைக்குவியல்கள் உள்நாடு மற்றும் வெளிநாடு தகுதி வாய்ந்ததாக கருதப்படும்.

BIC சான்றிதழுக்கு விதை மாதிரிகளை தாங்களாகவே சேகரித்து விதை பரிசோதனை நிலையத்தில் கொடுத்து முடிவுகளை நீலநிற சர்வதேச விதை மாதிரிகள் மூலம் சான்றிதழ்களாக பெற்று வணிகம் செய்யலாம்.

மேலும் விபரங்களுக்கு, **தி.மீனா, இளங்கலை வேளாண் மாணவி, முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், முனைவர் இர.மகாலட்சுமி, குழு மேற்பார்வையாளர், ம.பானுப்பிரியா, குழு மேற்பார்வையாளர், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர். பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**